1974 ஏப்ரல் 9]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இது யானை முகாமிலே பணியாற்று கின்றவர்களுக்கு வீட்டு வசதி கொடுப்பது பற்றிய கேள்வியாகும். ஏற்கனவே, 28 பணியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எஞ்சியிருக்கிற 18 பணி யாளர்களுக்கு பாக்கி இருக்கிறது. அவர்களுக்கு வீடு கட்டக் கூடிய திட்ட மிருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இதேபோன்று முதுமலையிலே யிருக்கிற சரணாலயத்திலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கெல்லாம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா? இல்லையென்றால், அதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் உடனே செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : முதுமலையிலே 10 பேர்களுக்கு இப்பொழுது வீடு கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கேயும் எஞ்சியிருக் கின்றவர்களுக்கு வீடு கட்டத் திட்டமிருக்கிறது. ஆனை மலைப் பகுதியிலே 26 பேர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க திட்டமிருக்கிறது. இம்மூன்று பகுதிகளிலே தான் யானை முகாம்கள் இருக்கின்றன. வீடு பெறுமலுள்ள எஞ்சியவர்களுக்குக் கட்டிக் கொடுக்கத் திட்டமிருக்கிறது.

மதுரை-திருப்புவனம் பேருந்து வழித்தடம்.

*799 வினா—**திரு. த. சோனையா :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் இருந்து திருப்புவனம் செல்லும் 32-எண் பேருந்தினை திருப்புவனம் பேருந்து நிலையம் வரை சென்று வரச் செய்வதற்கான செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. க. நாகராசன் : தலைவரவர்களே, மதுரை மாநகரத்திலே பெரும் பாலான வழித்தடங்கள் இன்றைக்கு பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தி னாலே ஓட்டப்படுகின்றன. எல்லா வழித்தடங்களையும் அரசு மேற்கொண்டு நடத்த முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அத்தகைய திட்டத்தை அரசாங்கம் ஏற்கனவே ஒப்புக்கொண்டு, அதற்கான உத்தரவுகளை விரைவிலே பிறப்பிக்க இருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்தக் குறிப்பிட்ட ரூட்டைப்பற்றிக் கேட்டதன் நோக்கமே, அது திருப்புவனம் வரையிலும் போவதென்றாலும், ஊருக்குக் கிட்டத்தட்ட 1/2 மைலுக்கு அப்பால் இருக்கிறது. ஆகவே, அந்த இடத்திலிருந்து வரக்கூடியவர்கள் வரவேண்டுமென்றுதான் இதைக் கேட்கிறோம். இதே மாதிரிதான் திருமங்கலம் பஸ் ஸ்டாண்டில் 1/2 மைலிலிருந்து பஸ் வருகிறது. ஆகவே, அந்த ஊர் எல்லைவரையிலும் போகுமா என்பதற்காகக் கேட்டிருக்கிறார்கள். அந்தமாதிரி ஏற்பாடுகள் டவுன் பஸ்ஸைப் பொறுத்தவரையில் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : திருப்புவனம் வரை செல்கின்ற இந்தப் பேருந்து திருப்புவனம் பஸ் ஸ்டாண்டுக்குப் போனால் 24 கிலோமீட்டருக்கு அதிகமான நீளத்தைப் பெற்றுவிடுகிறது. ஆகவே, நகர வழித்தடம் என்ற இலக்கினத்திற்குள்ளாக வருவதில்லை. மாவட்ட வழித்தடம் என்ற இலக்கணத்திற்குள்ளாக வரும். அப்படி வருமானால், கட்டண உயர்வு ஏற்படும். அதனால் மக்களுக்குப் பாதகம் ஏற்படும். ஆகவே, நகர வழித்தடம் என்ற இலக்கணத்திற்குட்பட்டு, 24 கிலோமீட்டர் தூரத்திற்குட்பட்ட, திருப்புவனத்திலேயே இந்தப் பேருந்து நின்றுவிடுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : அப்படிப்பட்ட வழித்தடங்களை அரசாங்கம் எடுத்துக்கொள்ள கொஞ்சம் காலதாமதம் ஆகும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதனால் பர்மிட்டை மாதாமாதம் ரின்யூ செய்து கொடுக்கிறார்கள். ஆகவே, அரசே எடுக்கும்வரை, பர்மிட்டை ரின்யூ செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, காலதாமதம் ஆகாது. 30—1—1974 அன்றே இதற்கான நோட்டிபிகேஷன் விடப்பட்டிருக்கிறது. அதிலே யார் யார் அதற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்கள் என்ற விவரத்தையும் அரசாங்கம் ஏற்கனவே பெற்றுவிட்டது. ஆகவே, மதுரை மாநகரத்தில் ஓடுகிற அத்தனை வழித்தடங்களையும் இன்னும் ஒன்றிரண்டு மாதத்திற்குள் அரசு மேற்கொள்ள வழியிருக்கிறது.

திரு. நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, நகரப் பேருந்துக்கு இலக்கணம் 24 கிலோமீட்டர் என்று குறிப்பிட்டார்கள். அதை 40 கிலோமீட்டராக அதிகப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நகரப் பேருந்தாக அது இருக்காது. ஆகவேதான் 15 மைல், 24 கிலோமீட்டர் என்ற வரையறைக்குள்ளே அது வைக்கப்பட்டிருக்கிறது.

1974 ஏப்ரல் 9]

திரு. ஏ. ஆர். சுப்பையா : 24 கிலோமீட்டர் என்பது பெயரளவில்தான் இருக்கிறது. திருநெல்வேலி ஜங்ஷனிலிருந்து, ஆலங்குளம் வரை பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன. ரெக்கார்டில் டவுனிலிருந்து, ஆலங்குளத்திற்கு விடப் பட்டிருப்பதாக இருக்கிறது. இந்தச் சம்பிரதாயத்தைக் கவனிப்பதைவிட, சர்க்கார் தலையிட்டு, முக்கியமான இடங்களுக்குப் பஸ் விட வழி வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன். ஸ்பெசிஃபிக்காகக் கேட்கும்போது, எங்களுடைய ரெக்கார்டில் டவுனிலிருந்து விடப்படுவதாகத்தான் இருக்கிறது. ஆனால் ஜங்ஷனிலிருந்து போகிறது, நாங்கள் என்ன செய்ய முடியும் என்று கேட்கிறார்கள். ஆகவே, டவுன் பஸ்ஸைப் பொறுத்தவரையில், விதிமுறையைக் கொஞ்சம் தளர்த்தி, சர்க்கார் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது ஒரு பிரச்னை. நகரத்திலிருந்து தூரத்தைக் கணக்கெடுத்தால் அது ஓரிடத்திலே முடியும். நகர பஸ் ஸ்டாண்டிலிருந்து தூரத்தைக் கணக்கெடுத்தால் அது ஓரிடத்திலே முடியும். ஆனால், பொதுவாக, வழித்தடங்கள் என்று சொல்லும்போது, பேருந்து நிலையங்களுக்கு இடையே உள்ள தூரத்தை எடுப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று அரசு கருதுகிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : நகரங்களிலுள்ள நெரிசலைத் தவிர்ப்பதற்கு நகரத்திற்கு வெளியே பரவலாகச் செல்ல வேண்டுமென்ற கொள்கையை அரசு ஏற்றிருக்கிறது. 24 கிலோமீட்டர் என்று வைத்திருப்பது அந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்த இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே, மீண்டும் பரிசீலனை செய்து, 24 கிலோமீட்டரை, 40 கிலோமீட்டராக உயர்த்தவாவது அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அத்தகைய உத்தேசம் எதுவுமில்லை.

திருவண்ணாமலை-சேலம் பேருந்து வழித்தடம்

* 800. **வினா—திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலையிலிருந்து தண்டராம்பட்டு, தானிப்பாடி, நரிப்பள்ளி, அரூர் வழியாக சேலம் செல்ல அரசு பஸ் ஒன்று விடும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?